(5)

சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

VOL-10. தொகுதி-10. | January. ஜனவரி 1915. | No-6. பகுதி-6.

ஐயம்புகினுஞ் செய்வனசெய்.

இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறியின்கணின்றொழுகுகின்றவன் தான் செய்தற்குரிய காரியங்களைக் கடன்வாங்கியேனுஞ் செய்வதவசியமாம்; கடன்கொடுப்பாரில்லாவிடத்துப் பிச்சையெடுத்தாயினுஞ் செய்வதவசியமாம். அவனுக்குரிய காரியம் இல்வாழ்க்கையைச் செவ்வையாக நடைபெறச் செய்வதாம். "பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகவினிதே", "கடன்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே", "செய்வன திருந்தச்செய்" என்று பெரியார் கூறியுள்ளவற்றை நன்கு கவனிக்குமிடத்து, செய்தற்குரிய காரியங்களைக் கடன் வாங்கியேனும், பிச்சையெடுத்தேனும் அவசியமாகச் செய்தல் வேண்டுமென்பது பிறழாது விளக்குவதாம்.

"ஐயம்புகினுஞ் செய்வனசெய்—நீ பிச்சையெடுத்தாயினுஞ் செய்தற்குரிய காரியங்களைச் செய்பக்கடவாய்" என்று நமது ஞானத்தாயாகிய ஔவைப்பிராட்டியார் திருவாய்மலர்ந்தருளியிருப்பதால், நாம் செய்தற்குரிய காரியங்களை மறவாது செய்யவேண்டுமென்பது பிறழாது விளங்குமன்றோ? வறுமை மிக்குப் பிச்சையெடுப்பதற்குரிய நிலைமையிலிருப்பவரும் தாம் செய்தற்குரிய காரியங்களை மறவாது செய்துவருவாராயின், அவர் விரைவில் மேம்பாடாகிய நிலையைபடைவது நிச்சயமாம். "வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை" என்று நறுந்தொகை கூறுவதை நன்குணர்ந்து

நோக்குமிடத்து, இல்லறத்தான்வறுமைமிக்குப் பிச்சையெடுப்ப
தற்குரியநிலைமையைத் தீவினைவயத்தால், பெற்றவிடத்தும், தான்
செய்தற்குரியகாரியங்களைமறவாதுசெய்தலே அவனுக்கு அழகாகு
மென்பது பெறப்படுவதாம். பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நி
யாசி, ஆதாரமானவரால்விடப்பட்டவர், வறுமையுடையார், திக்கி
ன்றித்தன்னிடத்து வந்திறந்தவர், பிதிரர், தெய்வம், விருந்தினர்,
சுற்றத்தார்என்னும் பதின்மர்க்கும் தனக்குரியபொருளைப்பங்கிட்
டுண்பது இல்லறத்தானுக்கு முக்கியக் கடமையாமாதலின், இவ்
வாறு பங்கிட்டுண்பதே அவன் செய்தற்குரிய காரியமாம். இக்காரி
யங்களைச் செய்யாதிருப்பவன் எவ்வாற்றால் இல்லறத்தானாவன்?
அவன் ஒருவாற்றானும் இல்லறத்தானாவதில்லையாம். ஒருவனது
தருமகுணம் அவனிடத்துப் பொருளுள்ளபோது நன்குவிளங்
குவதில்லையாம்; ஆனால், அவன் பொருளில்லாதவனாயவிடத்து
நன்கு விளங்குவதாம். தருமகுணமுடையான் வறுமைமிக்கவிட
த்துத் தான் செய்தற்குரிய காரியங்களைப் பிச்சையெடுத்தேனுஞ்
செய்வன்; தருமகுணமில்லாதவனோ வறுமை மிக்கவிடத்துத் தீய
வழியிற்சென்று பொருளீட்ட முயலுவதல்லாது தான் செய்தற்
குரிய காரியங்களைச் செய்வதேயில்லையாம். எவரேனும் ஒருவர்
பொருளுள்ள காலத்துத் தருமஞ் செய்பவராயிருந்து, வறுமை
மிக்கவிடத்து, அதனைச் செய்யாது விடுவராயின், அவர் இடம்பத்
திற்காகத் தருமஞ் செய்தாரன்றி உண்மையாகத் தருமஞ்செய்தா
ரில்லையென்று நிச்சயமாக அறியலாம். பழிபாவங்களுக் கேது
வாய செயல்களைச் செய்யுங்காலம் பிச்சையெடுத்துண்ணுங் கால
மேயாம். அக்காலத்தில் ஒருவன் செய்வனவற்றைத் திருந்தச்
செய் தொழுகுவது மிகவருமையாம், அக்காலத்தில் பழிபாவங்
களுக் கேதுவாய செயல்களைச் செய்யாதவன் எக்காலத்திலும்
பழிபாவங்களுக் கேதுவாய செயல்களைச் செய்வதில்லையாம்;
ஆனால், புகழ்புண்ணியங்களுக் கேதுவாய செயல்களையே செய்து
வருவானென்பது திண்ணமாம்.

வினைவிளைவுகளைத் தக்கார்வாயிலாக வுணர்ந்து அற (தரும)
நெறியிலொழுகுபவர் வறுமை மிக்கவிடத்து, பிச்சையெடுத்தே
னும் தாஞ்செய்தற்குரிய கருமங்களைச் செய்வதல்லாது மற(பாப)
நெறியிற்சென்று தாஞ்செய்தற்குரிய காரியங்களாகாதனவற்றைச்
செய்வதில்லையாம். அவை பொய், களவு, கொலை முதலியனவாம்,

"இலனென்று தீயவை செய்யற்க செய்யின், இலனாகு மற்றும்பெயர்த்து-யான் வறியனென்று கருதி, அதுதீர்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யாதொழிக; செய்வனாயின் பெயர்த்தும் வறியனாவன்'' என்று திருக்குறள் கூறுவதை நன்குணர்ந்து நோக்கினால், பிச்சை யெடுக்குங்காலம் நேரிட்ட விடத்தும் புகழ் புண்ணியங்களுக் கேதுவாகிய செயல்களைச் செய்யவேண்டுமேயன்றி, மீண்டும் வறுமை யடைதற் கேதுவாகியதீவினைகளைச்செய்வது கூடாதென்பது மாறுபாடின்றித் தோன்றுவதாம்.

"ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க, சான்றோர் பழிக்கும் வினை—தன்னைப் பயந்தாளது பசியை வறுமையாற் கண்டிரங்குந் தன்மைய னாயினானெனினும், அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை யொருவன் செய்யாதொழிக'' என்று திருக்குறள் கூறுவதை மறவாது ஞாபகத்திற்குக் கொண்டுவந்தொழுகுகின்றவர் எவ்வகைத்தாய விபத்து நேர்ந்தவிடத்தும் நல்லனவற்றைச் செய்வதன்றி அல்லனவற்றைச் செய்வதில்லையாம்; ஒருவனுக்குப் பிச்சையெடுப்பதினு மேற்பட்ட விபத்துப் பிறிதொன்று மில்லையாம். மாபலிச் சக்ரவர்த்தியினிடத்து மூவடிமண் யாசிக்கச் சென்ற திருமால் குறளாய் (இரண்டடியளவாய்)க் குறுகி விட்டாரென்று நூல்கள் கூறுவதை நோக்கினால் யாசிப்பவர்க்கு அங்கமுற்றுங்குறுகிவிடுகின்றதென்பதுவிளங்காதிராது. "பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச், சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி, மல்லெலா மகல வோட்டி மானமென் பதனை வீட்டி., இல்லெலா மிரத்த லந்தோ விழிவிழி வெந்தனான்றும்'' என்று குசேலோபாக்கியானம் கூறுமாறு இரத்தல் இழிவாயவற்று ளெல்லாம் மிக இழிவாதலால் அதனினுமிக்க விபத்து மானமுடையார்க்குப் பிறிதொன்றுமில்லையாம். அத்தன்மையதாய விபத்து நேரிட்டகாலத்தும் செய்வனவற்றைச் செய்தொழுகு கின்றவர்தாம் புலிபசித்தாலும் புல்லைத்தின்னாது என்னும் பழமொழிக்கிலக்கிய மாவர்.

வறுமைமிக்குப் பிச்சையெடுக்கும் நிலைமையினைப் பெற்றவனை அவன்தாய் என்னசெய்கின்றாள், பழிக்கின்றாள்; மனைவியோ கவனிப்பதில்லை; அவன் சொல்லுகின்றசொல் மதிப்பிற்குரியதாவதில்லை; அவனுக்கு அவமானம் அடிக்கடியுண்டாகின்றது; தீராத விசாரமோ அவனைவிட்டுத் தொலைவதில்லை; தைரியமென்பது அவ

னுக்குச் சற்றுமிலதாகின்றது; சபையிற் செல்வதற்கோ அவன் நாணமடைகின்றான்; செல்வரைக்கண்ட விடத்தோ அவன் தனது முன்னிலைமையைக் கருதித்தலை குனியுமியல்புடையவனாகின்றான்; ஆண்மையோ அவனிடத்துத் தங்கவஞ்சுகின்றது. இத்தன்மைய வாய நிலைமையி லிருப்பவன் தான் செய்தற்குரிய காரியங்களை மறவாதுபிச்சையெடுத்தேனும் பொறுமையோடு செய்து வருவானாயின், அவனது வாழ்க்கை பொன்மலர்நாற்றமுடைய தென்பது போலப் புகழ்பெறுவதற் குரியதாம்.

பொன்னையுருக்கிய விடத்து, அதன்குண மாறுகின்றதோ? பாலைக் காய்ச்சிய விடத்து அதன்சுவை கெடுகின்றதோ? சந்தனக்கட்டையைத்தேய்த்தவிடத்து அதன்மணம் குறைகின்றதோ? இல்லையன்றோ? இங்ஙனமே நல்லோர் தாம் வறுமை மிக்குப் பிச்சையெடுக்கும் நிலைமை நேர்ந்தவிடத்தும், தமது இல்லறவொழுக்கத்திற்குரிய காரியங்களைச் செய்வதன்கண் மறப்பதில்லையாம். நீங்கள் எத்தன்மையதாய விபத்துநேர்ந்தவிடத்தும் செய்வனவற்றை மறவாது செய்வீராயின், புகழ்புண்ணியங்களைப் பெற்றுப் புனிதராவீரென்று நம்மனோர்க்கு வற்புறுத்தற் பொருட்டே ஔவைப்பிராட்டியார் "ஐயம்புகினுஞ் செய்வனசெய்" என்று திருவாய் மலர்ந்தருளினர். பிச்சையேற்றல் துறவறத் தார்க்கு விதியாயும், இல்லறத்தார்க்கு விலக்காயுமிருத்தலின், "ஐயம் புகினுஞ் செய்வனசெய்" என்று ஔவையார் கூறியது இல்லறத்தாரை நோக்கியே யாமென் றிங்குணர்தல் வேண்டும்.

சுகநூல்.

10-ம் பாடம்.

ஜீர்ணம் (தொடர்ச்சி).

தீனிப் பையில் ஜீரணம் :—

பதார்த்தங்கள் தீனிப்பைக்குச் சென்றுவிட்டால், அங்கே நடக்கும் வேலையை நாம் கவனித்தல் முடியாது. ஆகாரங்கள் வாய்க்குள்ளிருக்குமளவும் அவற்றைக்கவனித்தல் முடியும். மேலுங் கீழுமாகிய வாயின் மீதும், நாக்கின் மீதும், பற்களின் மீதும் நம்முடைய அதிகாரம் செல்லும். வாய்க்குள்ளே நன்றாக மெல்லப் பட்டு, கூழான ஆகாரங்கள் தீனிப்பைக்கு வந்த உடனே, அத்

தீனிப்பையினுடைய தசைகள், நமக்குத்தெரியாமலேயே, சுருங்குவதும், விரிவதுமாக அசைகின்றன. வாய்க்குள்ளே இருப்பது போல, இங்கேயும் சில கிரந்திகள் உண்டு. அவற்றில் ஒரு விதத்திரவம் சுரந்து பைக்குள்ளே வந்துவிழும். பையின் தசைகளுடைய அசைவினாலே, ஆகாரங்கள் அத்திரவத்துடன் நன்றாகக் கலந்து ஜீர்ணமாகும். தீனிப்பையில் மாம்ஸம் முதலிய வெடியுப்பு நிறைந்த பதார்த்தங்களே நன்றாக ஜீர்ணமாகும்.

நாம் தீனிப்பைக்குள்ளே நடக்கும் வேலையைக் கவனிக்க முடியாவிட்டாலும், அப்பைக்குப் பிரயாசத்தைக் கொடுத்தல்முடியும். அநேகர் அதனுடைய வேலையைக் கஷ்டமாக்கி, அதனைக் கெடுத்து, அதனால்கொடிய வியாதிகளுக்கு ஆளாகிவிடுகின்றார்கள்.

தீனிப்பை அதிக வேலையினால் சோர்ந்து கெட்டுப்போகும் சந்தர்ப்பங்களாவன:—

1. பல், நாக்கு, உமிழ்நீர் இவற்றாலே சரியானபடி கூழாகாத பதார்த்தங்களாலே,

2. மித மிஞ்சிய உணவினாலே, மிதமிஞ்சிய உணவு கொள்ளும்போது தீனிப்பை சிறிது நேரம் வேலை செய்துவிட்டு, தான் செய்ய வேண்டிய காரியம் தன்னுடைய சக்தியின் அளவை மீறியிருப்பதை உணர்ந்து தன்னிடத்துள்ள வஸ்துக்களை, அவை வந்த வழியே திருப்பி அனுப்பிவிட்டுத் தன் தொந்தரவை நீக்கிக் கொள்ளுகின்றது. இதற்குப் பெயர் வாந்தி யெடுத்தல்.

3. அளவு மீறின ஜலத்தாலே, தீனிப்பைக்குள்ளே இருக்கும் திரவம் அதிகமாக ஜலத்துடன் கலந்து விட்டால், அதனுடைய சக்தி குறைந்துபோகும். ஜீர்ணவேலை கொஞ்சம் பிரயாசத்தோடு நடைபெறும். அதனால் தீனிப்பை சோர்ந்து விடும். தவிரவும், அங்கே ஆகாரங்கள் புளித்துப்போய், அநேகவிதமான வாயுக்கள் உண்டாகி, தீனிப்பையைப் பெருக்கடித்து, அதனுடைய பிகுவைக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தளர்த்தி, கடைசியாக அது சுருங்கவும், விரியவும் முடியாத வண்ணம் செய்துவிடும்.

4. மது முதலிய லாகிரி வஸ்துக்களாலே; இதுபற்றி விவரமாகப் பின் எழுதப்படும்.

5. திடீரென்று உண்டான ஒரு மனக் கலக்கத்தினலோ, அல்லது போஜனம் ஜீர்ணமாகா முன்னம் ஸ்நானம் செய்ததினலோ இரத்த ஓட்டத்தில் இடைஞ்சல்கள் ஏற்படும். அதனல் போசனம் செய்த வுடனே ஸ்நானம் செய்தல் தவறு. குறைந்தது மூன்று மணி நேரம் பொறுக்கவேண்டும்.

11-ம் பாடம்.

ஜீர்ணம் (தொடர்ச்சி).

குடலில் ஜீர்ணம்:—தீனிப்பையின் வேலையினலே அதனுள் இருக்கும் ஆகாரம் கூழுந் திரவமுமாகிக் கடைசியில் குடலுக்குள்ளே செல்லும். இங்கு நமக்குத் தெரியாமலேயே சில வேலைகள் நடக்கின்றன. அவற்றை நாம் கவனித்தல் முடியாது. அவ் வேலைகளோ மிகவும் சிக்குமுக்கான ரஸாயனச் செய்கைகள்; இருந்தபோதிலும் அவை மிகவும் சுலபமாகவும், அதிசயமான ஒழுங்குடனும் நிறைவேறுகின்றன. என்ன ஆச்சரியம்! நம்முடைய மனதின்படி நடக்கக்கூடிய காரியங்கள் (ஆகாரங்களைத் தெரிந்தெடுத்தல், அவற்றின் அளவு, உண்ணும் விதம்) அவ்வளவு சரியாக நடைபெறவில்லையே! நாம் அநேகமாய் ஒழுங்குக்கு விரோதமாக நடந்துகொள்ளுகிறோமே! அதனலே ஏதாவது வியாதி சம்பவித்தால், அது நம்முடைய பிழையேயாம். ஏனென்றால், நமது சரீரத்தினுடைய கருவிகளெல்லாம், நமது சுகத்தைக் கருதியே வேலை செய்யும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன; நம்முடைய செய்கைகளினலே நாம் வியாதிகளைக் கூவி யழைக்கின்றோமே யன்றி அவை தாமாகவே வருவதில்லை.

பற்கள்:—

முன்னமே பற்களின் பிரயோஜனத்தைப் பற்றித் தெரிவித்திருக்கிறோம். அவற்றைக் காப்பாற்ற வேண்டியதவசியம். பல்லில்லாத வாய் அவலக்ஷணமாகத் தோன்றும். பல்லில்லாவிட்டால் தீனிப்பைக்கு வேலை அதிகமாகிவிடும். தவிரவும் பற்கள் திடீரென்று விழுந்துவிடமாட்டா. அவைகொஞ்சம் ஆட ஆரம்பித்து, சகிக்கக்கூடாத நோவு கொடுத்துக் கொண்டிருக்கும். பற்களை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டே வந்தால், அவற்றை நெடுநாள் உறுதியாக இருக்கும்படி செய்து கொள்ளலாம்.

பற்களைக் கவனித்தல் மிகவும் சுலபமான காரியம்:—

1. அவற்றால் மிகவும் கடினமான பதார்த்தங்களைக் கடித்தல் கூடாது. அப்படிச் செய்தால் பற்களின் மேற் பாகமாகிய உறுதியான, வெள்ளை நிறமுள்ள பளிங்கானது வெடித்து, செதிள் செதிளாய் விழுந்துவிடும். அப்போது வியாதிகளின் ஸூக்ஷ்மமான கிருமிகள் பற்களின் உள்ளே நுழைந்து, அவற்றைத் தொளைத்துச் சொத்தையாக்கிவிடும்.

2. பிரதிதினமும் காலையில், கூடுமானால் மாலையிலும் பற்களைச் சுத்தமாகத் துலக்கவேண்டும். இக்காரியத்துக்குப் பற்குச்சியாவது, மாவிலையாவது, பற்பொடியாவது, "மர்ஷேல்" சவுக்காரமாவது, கரித் தூளாவது, உப்புத்தூளாவது உபயோகித்தல் நன்று.

3. ஏதாவதொரு பல் சரியான ஸ்திதியில் இல்லை யென்று தெரிந்தவுடனே, ஒரு நல்ல பல்வைத்தியனிடம் செல்வது நன்று. (வரும்)

ப்ரொபஸர்-சுப்ரமணிய ஐயர்,
புதுச்சேரி.

துருவ சரித்திரம்.

முன்தொடர்ச்சி.

முனிவர்கள் "அப்பனே! பகவானை வழிபடவேண்டும் என்னும் எண்ணம்ஒருவர்க்கும் உண்டாவதில்லை; சிறிதுண்டாயினும், மாயா மயக்கிலாழ்ந்து அதனினின்றுங் கரையேறும் வகையறியாது துக்கக்கடலிலாழ்ந்து துயருறுவர் பெரும்பான்மையோர். போகபோக்கியங்களைத் துச்சமென்று விடுத்து நிராசையுற்றுத் தம்முடைய சொரூபத்தையறிய வல்லவரே ஞானிகளாவர். போகபோக்கியங்களிலுள்ள பற்றே மனிதரைப் பந்தத்திற் குள்ளாக்குகின்றது. பற்றற்றார்க்கன்றிப் பரமன் திருவருள் கிடைப்பதரிது. ஆகையால் பகவானிடத்துப் பக்திசெய்ய விரும்பியவன் முதலில் சகலபற்றையும்விட்டு விடவேண்டும்; மனத்தை நிர்மலமாக வைத்துப் பகவானுடைய சரணாரவிந்தத்தில் நிறுத்தி வெளிநோக்கமின்றித் தியானித்தல் வேண்டும்" என்று மகாவிஷ்ணுவுக்குரிய மந்த்ரத்தை யுபதேசித்தருளினர். பின் "அப்பனே! உன்

னுடையமுதாதையாகிய மநுஇவ்வரியமந்திரத்தைஜபித்துத்தவம் புரிந்துவந்தார். அதனால் அவர்க்குப் பகவானுடைய திருவருட் செல்வம் கிடைத்தது; அந்த மகாநுபாவர் தாம் விரும்பிய சகல செல்வங்களையும் அடைந்து அழியாத புகழோடு விளங்கினர். நீயும் அவ்வரிய மந்திரத்தை ஜபித்துச் சர்வலோக நாயகனாகிய நாராயணனை மெய்யன்போடு வழிபடக்கடவாய்" என்றுகூறினர்.

இவ்வாறு முனிவர்கள் கூறவும், துருவன் பரம ஸந்தோஷ மடைந்து "இனி என் கவலையொழிந்தது; பிறப்பின் பயனை யடைந்தவனானேன்" என்றுகூறி அவர்களெல்லோரையும் பக்தி யோடு பணிந்து விடைபெற்றுச் சென்றான்.

சிறிதுதூரம் சென்றதும், அங்கொரு பெரியவனம் மனித சஞ்சாரமில்லாததாக விருப்பதைக்கண்டான். சிறுவனாகிய துருவ னுக்கு அந்த வனத்திற்செல்லக் கிஞ்சிற்றும் அச்சம் உண்டாக வில்லை. அவன் எண்ணமெல்லாம் முனிவர்களுடைய உபதேசத் தின்பிரகாரம் தியானத்திலிருந்துபகவானுடைய அநுக்கிரகம்பெற வேண்டுமென்னும் மேலான நோக்கத்திலேயே யிருந்தமையின், வேறு ஒன்றும் அவனுக்குத் தோன்றவில்லை. இப்படி ஏகாக்ரசித் தத்தோடு நடந்து பெருங்கானகத்திற் செல்லும் அச்சிறுவனது இயல்பை ஞானதிருஷ்டியால் முனிபுங்கவராகிய நாரதமுனிவர் அறிந்துஅவனெதிர்ப்பட்டு "குழந்தாய்! நீ எங்கே இந்தக்கானகத் தின் வழியே செல்லுகின்றாய்;நீவேந்தனுடைய புதல்வனாயிற்றே! உனக்கென்னகுறைவு நேரிட்டது? வீட்டைவிட்டு ஏன் புறப்பட்டு வந்தாய்? உனக்கு உன் உறவினரால் ஏதேனும் அவமானம் நேரிட் டிருக்குமோ? அப்படி யேதேனுமிருந்தாலும், அவற்றை நீயேன் பொருட்படுத்தவேண்டும்? உன் மாற்றாந்தாய் உன்னைக் கடிந்து பேசியது பொறுக்காமல் வெளிப்பட்டிருக்கின்றாய். நீ இப்போது தவத்தை நாடிச்செல்லுகின்றாய்?இன்னும்ஐந்து பிராயமும் நிறை வேறப்பெறாத நீ தவஞ்செய்ய முற்படுவது சரியல்ல; தவம் என் பது உன்னால் அனுஷ்டிக்கத் தக்கதா? அஃது அசாத்தியமானது. மேலும், துஷ்டமிருகங்கள் சஞ்சரிக்கும் இவ்வனத்தில் நீ எப்படி யிருப்பாய்? கடவுளைக்காண்பது உலகியல் புணராத பாலகனாகிய உன்னால் கூடுமானதா? ஏன் இவ்வெண்ணங்கொண்டு புறப்பட் டாய்?" என்றுகேட்டார். துருவன், "முனிநாதரே! தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. கடவுளைநோக்கித் தவஞ்செய்து

அவருடைய அநுக்கிரகம் பெறுவதிலேயே என்சித்தம் பெரிதும் நோக்கமுடையதா யிருக்கின்றது; வேறொன்றையும் பெரிதாகக் கருதவில்லை. எனக்கு இவ்வனத்தில் ஒருபயமும் தோன்றவில்லை; என்மனம் எங்கும் நிறைந்துள்ள பரந்தாமனையன்றி வேறொன்றையும் பொருளாகவே கருதவில்லை. என்சிற்றன்னை என்னை அவமதித்துப் பேசியதே நான் இவ்வாறு புறப்படுவதற்குக் காரணமாயிற்று! தவத்தைப்புரிந்து மூவுலகுக்கும் மேலானஸ்தானத்தை அடைவதில் விருப்பம் அதிகமாக இருக்கின்றமையின் தாங்கள் அதற்குரிய வழிகளை யுபதேசித்து என்மனோரதத்தை யடையச் செய்தருளவேண்டும். இதனால் என்னகஷ்டங்கள் நேரிடினும் என்மனம் தளராது என் அன்னையின் உத்தரவுப் பெற்றுத் தவஞ் செய்து மேலநிலையை யடைய வந்திருக்கின்றேன். கருணையுடைய மகாமுனிவரே! வந்தனம் புரிகின்றேன்" என்றுகூறி அவர் தம் திருவடியிற் பணிந்தெழுந்தான். முனிவர் "பாலக! உனக்கு மங்கள முண்டாகுக. உன் எண்ணங் கைகூடும். உன்சித்தம் பரிசுத்தமானது. பரிசுத்தமான மனமுடையவரிடத்தே பகவான் கருணை பாலிப்பார். பகவான் தன்மை தன்னைத் த்யானிப்பவர்களுடைய விருப்பத்தைக் கொடுப்பதுதான்; ஆகையால் நீ தவம் புரிவதற்கு யோக்யமான யமுநாநதி தீரஞ்சென்று அங்குநீராடி நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு அருகேயுள்ள வனத்திற்சென்று தவச்சாலை ஏற்படுத்திக்கொண்டு அங்கிருந்து அடியார்க்கடியனும், அருளுருவாக விளங்குபவனும், வைகுண்டநாதனும், லக்ஷிமீகாந்தனுமாகிய நாராயணனைத் தியானித்துத் தவம்புரிவாயாக; பரந்தாமன் உனக்குப் பிரத்யக்ஷமாகி நீ விரும்பியவாறு அநுக்கிரகஞ் செய்வார். அப்பா! இந்த மந்திரோபதேசத்தைப் பெற்றுக்கொள்" என்று கூறிப் பாலகனாகிய துருவனுக்கு துவாதசாக்ஷர மந்திரத்தை உபதேசித் தருளினார். அரிய மந்த்ரோபதேசம் பெற்ற துருவன், முனிவரைநோக்கிக் கைகுவித்தவாறு நின்று "ஸ்வாமி! தன்னியனானேன், தேவரீர் ஆக்ஞைப்படி நடக்கின்றேன்! போகின்றேன், விடைதரவேண்டும்" என்று பிரார்த்தித்தான். நாரதர் "போய்வா; உனக்குச் சர்வ மங்களமுமுண்டாகும்" என்று ஆசீர்வதித் தனுப்பினார். அப்பால் துருவன் யமுனாநதியை நோக்கிச்சென்றான்.

4 வது அத்யாயம்.

இவ்வாறு துருவனுக்கு உபதேசஞ் செய்த பிறகு முனி சிரேஷ்டர் நகரத்துட் சென்று உத்தானபாதனுடைய அரண்மனையை யடைந்து தம்வருகையை வாயில்காப்பவன் மூலமாகத் தெரிவித்தார். அரசன் நாரதர் வந்திருக்கிறாரென்று கேட்டதும் விரைந்து வெளியே வந்து முனிவரைக் கண்டுவணங்கி, பயபக்தியுடனே வரவேற்று அழைத்துச்சென்று ஒருதிவ்யாசனத்து வீற்றிருக்கச்செய்து அர்க்ய, பாத்ய, ஆசமனமளித்து உபசரித்தான். அரசன், தன்மைந்தன் நகரத்தைவிட்டு வெளிப்பட்டதனால் மிகுந்த கவலை கொண்டிருந்தமையால் அவன்முகம் ஒளிகுன்றியிருந்தது. "அகத்தினழகுமுகத்தில்தெரியும்" என்பார்களல்லவா? அவ்வாறே அவ்வரசனுடைய உள்ளக்கவலையை அவன் முகம் வெளியாக்கியது. ஆகவே, முனிவர், அவனைநோக்கி, வேந்த! உன்சித்தம் எதனையோ ஒன்றையெண்ணிப் பெரிதுங் கவலை கொண்டிருக்கின்றதென்று தோன்றுகின்றதே! எதைப்பற்றிக் கவலையுற்றது உன்மனம்? என்று கேட்டார். அரசன், "சுவாமி! நான் மகாபாபி! என் சித்தம் கொடிது! அதனால் வருந்துகின்றது. என் செல்வக் குழந்தையும் அழகிலும் குணத்திலும் நிகரற்றவனுமாகிய துருவன் நான் சிம்மாசனத் திருக்கும்போது என்மடிமீது ஏறி உட்காரவந்தான்; அப்பொழுது இளையாள் மயக்கத்தில் மூழ்கிய பேதையாகிய நான் அச்சிறுவனை யேற்றுக்கொள்ளாமலிருந்து விட்டேன். அவனுடைய மாற்றாந்தாய் அதற்கேற்ப, அவனை அவமதித்துப் பேசினாள். அதனால் அம்மைந்தன் நகரத்தைத்துறந்து காடி, புலி, சிங்க முதலிய துஷ்டமிருகங்கள் வசிக்கும் காட்டிற்குச்சென்று விட்டான். அப்பாலகன் அங்கெப்படிப்பட்ட கஷ்டங்களை யநுபவிக்கின்றானோ தெரியவில்லை. அவன் தன் மிருதுவான கால்கள் கொப்பளிக்க அவ்வனத்தின் கண் எப்படி நடந்து செல்கின்றானோ தெரியவில்லை. என்நெஞ்சம்அதைநினைக்குந் தோறும் புண்ணாகின்றது. பசிதாகத்தினால் அவன் என்னபாடுபடுகின்றானோ; இன்னும் அவன் உயிருடனிக்கின்றானோ இல்லையோ அறியேன்! பிர்மஹத்திக் குள்ளானவன்போல் மயக்குற்று ஒன்றுந் தோன்றாதவனாக இருக்கின்றேன். பரமதயாநிதியே! என்னிலும் மூடனொருவனுண்டோ!குழந்தையைஅநாதரவு செய்தேன் என்று அதிக அநுதாபம் மேலிட்டு முனிவரிடம் முறையிட்டான். முனி

வர்? "வேந்தே! உன்மகன் மகாபரிசுத்தன்; அவன்பொருட்டு நீ கவலைகொள்வதுவீண்! அவனைநான் வனத்திற்கண்டேன்; அவன் உள்ளக்கருத்தை யுணர்ந்து அது சித்தியாவதற்குரிய அரியமந்திரோபதேசஞ் செய்தேன். அவன் தவத்தை நாடிச்செல்கின்றான். அவனுக்குப் பரமதயாநிதியும், பாவனாதீதனும், பக்தவத்ஸலனும், சகலபுவன கர்த்தாவும், பரமேசுவரனுமாகிய நாராயணனுடைய திருவருட்பேறுகிடைக்கும்! அவன் ஒருவரும் அடையாத மேலான பதத்தைப்பெறுவான். நீ கவலைப்படாதே; இதைத்தெரிவிக்கும் பொருட்டே இங்கு நான்வந்தேன். போய்வருகின்றேன்," என்றுகூறி ஆகாயவழியே சென்றார்.

முனிவர் இவ்வாறு தன்மகனுடைய நிலைமையை யுணர்த்தக் கேட்டும் அவ்வரசன் சித்தசாந்தி யடைந்தானில்லை. என்னசெய்வான்! பாலகனல்லவா வனத்திற்சேகியுள்ளான்! பிள்ளையைப் பிரிவதென்னில் யாவரே மனம் பொறுப்பர்? துருவன்பெரிதும்புண்ணியம் செய்தவனாகையால் அவன் பாலகனாகவிருந்தும் செயற்கரிய தவத்தை வனத்திலிருந்து செய்து இறைவன் திருவருட்பேறு பெறுவதில் அவனுக்குத்தைரியமும், ஊக்கமும், மேலான எண்ணமும், வன்மையும் உண்டாயின. அவனுடைய மகிமையை அரசன் அறியானாதலால் இவ்வாறு வருந்தி நின்றான். இதனாலே தான் அவரவர் புண்யபாப வயத்தின்படி யாவும் நடக்கும் என்று கூறுகின்றனர் பெரியோர். நல்வினை செய்தவன் நன்மையையும், தீவினை செய்தவன் தீமையையும் பெறுவது திண்ணமென்று நீதிநூல்களும் பெரியாரும் கூறுவது மெய்யன்றோ?

(வரும்).

திரு-அ-சுப்ரமணிய பாரதியார்.

குசேலோபாக்யானம்.

முகத்தினிடத்து நீண்டஉரோமமும் எள்ளிடுதற்கும்இடமில்லாது பொத்தல்களையுடைய கந்தைத்துணியும் மிகவிளைத்தவுடம்புமுடைய குசேலமாமுனிவர் இவ்வாறு வாயிற்காவலர் நிற்குமிடத்திற் சென்று சேர்ந்தபோது, இவர்கள் பாகவதர்களாவ ரென்று கண்டோர் யாவரும் கூறுதற்குரிய திருமண்காப்பு, தாமரைமணிமாலை, துளசிமணிமாலை முதலிய வைணவச் சின்னங்களைத் தரித்து விளங்குகின்ற துவாரபாலர்களைப் பார்த்து மகிழ்வுற்று, வைணவசிகாமணி களாகிய இத்துவாரபாலர்கள் பரமபதத்திலுள்ள துவாரபாலர்களாகிய ஜய விஜயர்களே யாவர்; இவர்களை யொப்பார் உலகத்துள் ஒருவருமிலராவ ரென்று நினைத்து, அவர்களுக் கெதிரே சென்று, அவர்களை நோக்கி, நற்குணங்களை யுடையவர்களே! யான் கூறுவனவற்றைக் கேட்க வேண்டுமென்று கூறிச்சொல்லத்தொடங்கினார். மக்களுள் சிறந்தவர்களே! பாகவதர்களே! புண்ணியசாலிகளே! பெருந்தவ முனிவர்களும் பிரமனும் அடைதற்கரிய புகழையுடையவர்களே! சர்வசாஸ்திர பண்டிதர்களே! எனது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் இலக்குமி மணாளனாகிய கண்ணபிரானுக்கு அடிமைத்தொழில் செய்திருத்தலினால், எனக்கு உங்களைப் பார்க்குந்தோறும் கண்ணபிரானைத் தரிசித்தாற்போலப் பெருமகிழ்வுண்டாகின்றது. எளியவனாகிய யான் அந்தணர்குலத்திற் பிறந்தவன்; என்னுடைய பெயர் குசேலன் என்பது; கண்ணபிரானோடு நான் இளம்பிராயத்தில் சாந்தீப முனிவரிடத்துப் பலபல சாஸ்திரங்களை ஐயந்திரிபு அறியாமையென்னு முக்குற்றமு மொழியப் படித்திருக்கின்றேன்; கடலை மானுமியினுதவியால் கடந்து அக்கரையைச் சேர விரும்பும் ஒருவனைப்போல ஜனநெருக்கத்தையுடைய இவ்வரண்மனை வாயிலை உங்களுதவியால் கடந்து கண்ணபிரானையடைய விரும்பியிருக்கின்றேன்; கோவர்த்தனகிரியைக் குடையாகவெடுத்து, இந்திரனேவிய கல்மழையைத்தடுத்து, ஆயர்களைக் காத்தருளிய கண்ணபிரானிடத்துச் சென்று ஏழையேனது வரவையறிவித்து என்னை அவ்விடத்திற் சேர்த்தல் உமது கடமையாமென்று கூறினார்.

குசேலமுனிவர் இவ்வாறு துவாரபாலர்களை நோக்கிக்கூறிய வற்றை அவர்களது பக்கத்தி லிருக்கின்றவர்களுள் சிலர் கேட்டு, அறியாமையின் மிகுதியால் குசேலர் முகத்தையுற்றுப்பார்த்து பல பொத்தல்களையுடைய கந்தைத் துணியைத் தரித்துள்ள ஏழைப் பார்ப்பானே! உலகத்தாரைப் பாதுகாத்தற் பொருட்டு, அவர்க்குப் பகைவராயுள்ளவரை யழித்து அரசுபுரியும் கண்ணபிரான் எங்கே? நீ யெங்கே? உனக்குப் பகுத்தறிவு இல்லைபோலும்; நீபயனற்ற மூப்பையடைந்தாய் போலும்! ஏழைப்பார்ப்பானே! பகைமன்னர் வணங்கும் பாதத்தையுடைய கண்ணபிரானது தன்மையையும் ஏழையாகிய உனது தன்மையையும் ஆராய்ந்து நோக்கினுல், அவை மாதங்கத்திற்கும் (யானைக்கும்) மசகத்திற்கும் (கொசுவுக்கும்), கடல்நீருக்கும் (பசு)வின் குளப்படி நீருக்கும், மேருமலைக்கும் மண்ணுங்கட்டிக்கும், சூரியப்பிரகாசத்திற்கும் மின்மினிப் பூச்சியின் பிரகாசத்திற்கும், கற்பக விருட்சத்திற்கும் சிழ்கம் புல்லுக்கும், ஆதிசேஷனுக்கும் நாங்கூழ்ப்பூச்சி (நாக்குப் பூச்சி)க்கும் உள்ள வேற்றுமை போல்வனவாம்.

இராஜ சபைக்குச் செல்லுகின்றவர்க்கு இவர் பெருஞ் செல்வமுடையவ ரென்று யாவருங் கூறும் புகழ் மொழி வேண்டும்; அவர்கள் இரண்டு கைகளிலும் கடகங்கள் பூண்டிருக்க வேண்டும். செவிகளில் இரத்தின குண்டலங்கள் தரித்திருக்க வேண்டும்; விரல்களில் மோதிரங்கள் தரித்திருக்க வேண்டும்; மார்பினிடத்து பதக்கமும் முத்துமாலையும் தரித்திருக்க வேண்டும்; உயர்ந்த பட்டாடை கட்டி யிருக்க வேண்டும்; பல்லக்கு குதிரை முதலியவற்றின் மீது ஏறி வரவேண்டும்; பொருளை மிகுதியாகச் செலவு செய்யவேண்டும்; கைகுவித்து வணங்கும் ஏவலாளர்களும் வேண்டும்; சிங்காரமா யிருத்தல் வேண்டும்; குடை பிடிப்பவரும் வேண்டும்; காணிக்கையைமிகுதியாகக்கொண்டுவர வேண்டும்; பலர் மதித்துப் பேசுதலை யுடையவரா யிருக்க வேண்டும்; ராஜ சபைக்கு வருபவர் பெருஞ் செல்வ முடையவராயிருந்தால் அவரை வாயிற் காவலர் முகமன் (உபசார வார்த்தை) கூறி வரவேற்பர்; தரித்திரரா யிருந்தாலோ அவரைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவார்கள். நேற்றுண்ட உணவின் வகையை இன்று நாம் மறந்துவிடுவ தியல்பல்லவா? உனது முற்கால நட்பினைக் கண்ணபிரான் இப்போது மறவா திருப்பரோ?

செல்வர் தம்மை யொத்த செல்வரிடத்து நட்பாயிருப்பரன்றி ஏழையரிடத்து நட்பா யிருப்பதில்லை யென்பது பிரசித்த மன்றோ? பெருஞ் செல்வ முடையவராய், அரசர் யாவரும் போற்ற, அரசாளும் கண்ணபிரானிடத்து உனது நட்பு எத் தன்மையதாம்? பூமியாகிய ஐசுவரியத்தை விரும்பி தும்பை மாலை சூடி, பகைமன்னரைக் கொல்லுங் காலத்தில் இவர் எமது தந்தையார்; இவரெமது புத்திரர்; இவரெமது தமையன்மார்; இவரெமது தம்பிமார் என்று கருதாது, அவர்களைக் கொல்லும் அரசரது நட்பு யாது பயனைத் தரும்?

தரித்திரத்தால் வருந்தும் பார்ப்பானே! பகை மன்னரை வென்ற அப்பொழுதே அவர் நகர முழுவதையும் கழுதை பூட்டிய ஏரினால் உழுவித்து, அதனிடத்து வரகு, கொள் முதலியவற்றை விதைப்பித்து, பின்னர்த் தாங்கொண்ட சினத்தை விடும் அரசரது நட்புச் சிறப்புடையதாமோ? அரசர்கள் ஆவும் (பசுவும்) அந்தணரும், மகளிரும், பிணியாளரும், பிதிர்க் கருமஞ் செய்யப் புத்திரப்பேற்றை விரும்புகின்றவரும், யாம் பாணப்பிரயோகஞ்செய்வதற்குமுன் அரணு(காவலு)ள்ளவூரை யடையக்கடவரென்றுகூறுவரன்றிப் பின்வருவனவற்றுள் ஒன்றையும் ஆராய மாட்டார்கள். ஒருவன் கல்வியான்களுள்ள ஊரில் குடியிருந்தறியானாயினும், பெருஞ் செல்வ முடையவனா யிருந்தால், அவன் ராஜ சபைக்கு வருதற்குச் சிறப்புடையவனாவன்; மற்றொருவன் வேத முதலிய நூல்களெல்லாவற்றையும் கற்றுணர்ந்தவனா யிருப்பானாயினும் வறியவனா யிருந்தால், அவன் ராஜ சபைக்கு வருதற்குரியவனாகான். அரசர்கள் காமம் வெகுளி மயக்கங்களுள் ஒன்று தோன்றுமாயின், வேதம் கூறும் விதி விலக்குகளை மறந்து விடுவர்; அமைச்சர் இடித்துக் கூறுவதையும் அங்கீகரியார். ஏழைப் பார்ப்பானே! நீ கண்ணபிரான் என்னோடு கல்வி பயின்ற காலத்தில் நட்பாயிருந்தா னென்று கூறினாய். அந்த நட்புக் கண்ணபிரானிடத் திருக்குமாயின், அவன் சென்ற பலவருஷங்களுள்ளே உனக்கு இரண்டொரு திருமுகமெழுதி யனுப்பியிருக்கலாமே? அல்லது தூதரை யனுப்பி நீ வரக்கடவாயென் றுன்னை அழைத்திருக்கலாமே? கண்ணபிரான் உன்னோடு சாந்தீப முனிவரிடத்தில் கல்வி பயின்ற காலத்தில் அக்காலத்தின் தகுதிக்கேற்ப உன்னோடு நட்புக் கொண்டான் போலும்? இக்காலத்தில் அக்

167

கண்ணபிரானது தகுதியானது இந்திரனும் அணுகுதற் கரியதாயிருக்கின்றது. ஆதலால் நீ முற்காலத்து நட்பை யெண்ணிக் கண்ணபிரானிடத்துச் செல்லுதல் தகுதியுடையதாகாது. எக்காலத்திலும் அரசர் யாவரிடத்தும் நட்புடையவராகார்? அவற்றையெல்லாங் கருதாது கண்ணபிரான் நம்மிடத்து நட்புடையரென்றெண்ணி சமயநோக்காது செல்லுவாயாயின் உனக்கு விரைவாகப் பேரவமான முண்டாகும். விளக்கை முத்தமிட்டால், அது சுடாது விடுமோ? பிராமணனே! நீ உனது சாதியார் செய்யுந் தொழிலை நன்றாகச் செய்து, உண்டுடுத்திக் காலங் கழிப்ப தொழிந்து, பேராசை கொண்டு இவ்வளவு தூரம் நடந்து வந்து இளைத்தனை; உன்உடம்பும் வாட்டமடைந் திருக்கின்றது; இக்காரணத்தால் நீ வானிற் செல்லும் மதியை (சந்திரனை) வாவென்று கூப்பிட்டு, அது வாராமையால் மனங் கசிந்தழும் குழந்தை போன்றிருக்கின்றாய். அளகாபுரிக் கரசனாகிய குபேரனும் அமராவதிக்கரசனாகிய இந்திரனும் கண்ணபிரானது சேவையின்பொருட்டுக் காத்திருக்கின்றதை நீ காணவில்லை போலும். இந்திரன் போல இவ்விடத்தி லிருக்கின்ற அரசன் மகத தேசத்தரசனாவன், அவ்விடத்தில் மதயானை போன்று ஒரு குதிரைக் கருகே நிற்கின்ற அரசன் கொங்கண தேசத் தரசனாவன்; உவ்விடத்தில் வாளாயுதத்தைப் பிடித்து நிற்கின்ற அரசன் கூர்ச்சரதேசத்தரசனாவன். மலைபோலுள்ள தனது திண்ணிய தோள்களில் வாகுவலயங்கள் பிரகாசிக்கநிற்கின்ற அரசன் அங்கதேசத்தரசனாவன்; மன்மதன்போல வெண் கொற்றக் குடையின் கீழ் நிற்கின்ற அரசன் காம்போஜ தேசத்தரசனாவன்; வெற்றி வேலை வலக்காத்திலேந்தி ஆண்சிங்கம் போல நிற்கின்ற அரசன் துளுவதேசத் தரசனாவன். காளையர் சூழவும் மணிமுடி ஒளி வீசவும் நிற்கின்ற அரசன் பல்லவதேசத் தரசனாவன்; வயிரக்குழையும் மதாணியும் (பதக்கமும்) ஒளிவீச நிற்குமரசன் கலிங்க தேசத் தரசனாவன்; அளவிறந்த சேனை சூழ யுத்த கோலத்தோடு நிற்குமரசன் கேகய தேசத் தரசனாவன்; இரத்தக் கறையுள்ள வேலோடுநிற்குமரசன் சிங்கள தேசத்தரசனாவன்; யானைக்கூட்டத்து நடுவே ஆண்சிங்கம்நிற்பது போல நிற்கும் அரசன் வங்கதேசத் தரசனாவன்; போர்க் கவசத்தைத் தன்னுடம்பில் விளங்குமாறு தரித்திருக்குமரசன் மராடதேசத்தரசனாவன்; பக்கங்களிலெல்லாம் சேனை சூழ அலங்காரமாக நிற்கின்ற அரசன் மச்ச தேசத்தரசனாவன்; மிகப் பிரகாச

முள்ள மணிமுடியணிந்து ஆண்யானை போன்று நிற்கின்ற அரசன் குடக தேசத்தரசனவன்; காணிக்கையோடு நிற்குமரசன் காந்தாரதேசத் தரசனவன். கந்தைத் துணியைக் கட்டியுள்ள பிராமணனே! இவ்வளவு அரசர்களுள் நீ யாரை யொத்திருக்கின்றாய். கண்ணபிரானது சேவை எளிதிற் கிடைப்பதாமோ? ஏழைப் பிராமணனே! நீ சிரார்த்தஞ் செய்யும் வீடுதோறுஞ் சென்று யாசிக்குந் தொழிலை விட்டு, கண்ணபிரானைக் காண விரும்பியிருப்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைகொண்டிருப்பது போலவாம். இத்தலை வாயிலின்கண் கண்ணபிரானைத் தரிசித்தற் பொருட்டுக் காத்து நிற்கின்ற இவர்களுக் கெல்லாம் பெருஞ் செல்வமிருக்கின்றது; ஏவலாளர்கள் மிகுதியாக விருக்கின்றனர். ஆகையால் இவர்கள் எவ்வளவு காலங் காத்திருப்பினும் இவர்களுக்கொரு துன்பமு மில்லையாம். வறுமைப் பிணியால் வருத்தமுற்றிருக்கு முனக்குக் கண்ணபிரானைத் தரிசிக்கக் காத்திருத்தலாகிய இது பொருத்த முடையதன்றாம். ஆதலால், ஏழைப் பிராமணனே! நீ வந்த வழியை யறிந்து உன்னூர்க்குப் போவது உனக்குத் தகுதியாய கருமமா மென்று இழிமொழி பலவற்றைக் கூறினார்கள்.

தவச்சிரேட்டராகிய குசேலமாமுனிவர் அவர்கள் சொல்லிய அச் சொற்களைக்கேட்டுத் துன்புற்றுக் கண்ணபிரானைத் தரிசிக்க வருகின்றவர்க்கு மதாணி வேண்டுமாம்; முத்தாரம் வேண்டுமாம்; பட்டாடைவேண்டுமாம்;வாகனம்வேண்டுமா மென்றிவர்கள் கூறுகின்றனரே; இவற்றையா மிப்போது பெறுவதெவ்வாறாம்? மதாணி முத்தாரம் என்றற் றொடக்கத்துப் பெயர்களை நமது மூதாதைகாலத்திலும் நாம் கேட்டதில்லையே! இப்போதுயாம் செய்யத்தக்கது யாதாம்? ஒருகாரியத்தை முன்னாலோசியாது செய்தல் எப்போதும் தீயதேயாம்; இவர்கள் கந்தைத்துணியில் முடிந்து மறைத்து வைத்திருக்கின்ற நமது காணிக்கைப் பொருளைக் கண்டார்களாயின், மிகவும் அவமதித்துச் சிரிப்பரேயெனப் பலவாறாக வெண்ணிக் கலங்கி அவ்விடத்திற் றிகைத்துநின்றனர்.

(வரும்).

வைகறைத் துயிலெழுவதேன்?

மனிதர் உலகத்தில் அநுபவிக்கும் இன்பத்திற் கெல்லாம் காரணமாயிருப்பது தேஹத்தில் ரோகமில்லாமையேயாம். பகலிரவு முழுதும் நோயால் துன்புறுத்தப்பட்டுக் கஷ்டப்படும் ஒருவனுக்கு அமுதமும் நஞ்சாகு மன்றோ? தேஹாரோக்யத்திற்கு ஸாதகமாயிருக்கும் பலவகைக்கருவிகளுள் அதிகாலையில் எழுந்திருப்பதே ப்ரதானமாயுள்ளது. ஸூர்யோதயத்திற்கு முன் நித்ரை விட்டு எழுந்திருப்பது ஸுகாதாரத்திற்கு மிகவும் ஏற்றதென்று வைத்ய சாஸ்திரங்கள் கூறுவதை ஸாதாரணமாக எல்லா மனிதர்களும், முக்யமாக ஸகல மாணாக்கர்களும் கவனித்து, அங்ஙனமே அப்பயஸித்துவருவது அவஶ்யமாம். ஒருநாள் முழுவதும் சிறிதும் ஓய்ச்சல் ஒழிவின்றி அல்லற்பட்டு, இரவில் நிம்மதியாகத் தூங்கிவிட்டு, விடியற்காலையில் எழுந்தால் தேஹத்திற்கு ஒருவித உற்சாகம் உண்டாவதுடன் மனமும் தெளிவடைந்திருக்கும். அப்பொழுது மாணாக்கர்கள் தம் நித்யபாடங்களைச்சிரத்தையுடன் ஒருமுறை வாசித்தாலும், பலநாள் வரை மறவாமலிருப்பார்கள். ராத்ரியில் பலமுறை வாசித்தும் வாராதபாடம் விடியற்காலையில் ஒருமுறை வாசித்ததும் மனதில் நன்றாய்ப் பதிந்து விடுவதை மாணவர்கள் பலர் தம் அநுபவத்தில் கண்டறிந்திருப்பார்கள்.

மாணாக்கர்கள் மாத்ரம் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டுமென்னும் ஒருவித விதியும் கிடையாது. வாலிபர்களும் வயோதிகர்களும் அருணோதயத்தில் எழுந்து உலாவுதல் முதலிய ஸுலப அப்பியாஸங்களை மேற்கொள்வார்களாயின், அவர்களிடம் பிணி ஏன் அணுகும்? அங்ஙனம் செய்தல் அவர்களுடைய தேஹாரோக்கியத்தை அபிவ்ருத்தி செய்வதுடன், ஆயுளையும் நீடிக்கச் செய்கின்றதென்று தேஹதத்வ சாஸ்திரிகள் கூறுகின்றார்கள். ஹிந்துமத நூல்கள், பகவானைப் பஜிப்பதற்கு உஷஃகாலமே உசிதமென்று கூறுவதை நாம் உணர வேண்டும். திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சிக்களைப் பாடுதல் முதலிய ஈஶ்வரனை த்ருப்தி செய்யத்தக்க பரிசுத்த செயல்களை அதிகாலையில் தேவஸந்நிதியில் ஆராதனை செய்யும் பொருட்டு நம்முன்னோர்கள் விதி ஏற்படுத்தியிருப்பதற்குக் காரணம், உஷஃகாலத்தில் எழுந்திருப்பதனால் உண்டாகும் ப்ரயோஜனத்தை உத்தேசித்தேயாம். ப்ராஹ்மணர்கள், பாடனம் பண்ணுதற்குரிய பல அரிய நூல்களையும், வரை

யறையற்ற வேதத்தையும் மிக எளிதாகக் கற்று எப்பொழுதும் மறவாமலிருப்பதற்குக் காரணம் யாது? அவர்கள் விடியற்காலத்தில், நித்ரை விட்டு எழுந்து, குளிர்ந்த ஜலத்தில் நன்றாக ஸ்நானம் செய்து பின்னர்ப் பகவானை மனமாற ஸ்தோத்ரம் செய்து, பின் தங்கள் வேதங்களைக் கற்கத்தொடங்குவதால், அவர்களுக்கு அவை என்றும் அழியாச் செல்வம்போல் ஆய்விடுகின்றன. தற்காலத்து ப்ராஹ்மணர்கள் அங்ஙனம் செய்கின்றனரா? என்று கேட்க வேண்டாம். இப்பொழுதும் க்ராமங்களிலுள்ள அந்தணர்கள் அங்ஙனம் செய்வதை நாம் ப்ரத்யக்ஷமாகக் காணலாம். ஞாபகசக்திக்கும், புத்திக்கூர்மைக்கும் வைகறைத் துயிலெழுதலே காரணமாம்.

அருணோதயத்திற்கு முன் எழுந்து பட்டணத்தைக் கடந்து இரண்டு மூன்று மைல் நடந்து, தனிமையான ஓர் இனிய இடத்தில் நாற்புறமும், வ்ருக்ஷவர்க்கங்களின் பசுமையையும், பக்ஷிகளின் மனோஹரமான ஒலியையும், நதி, ஏரி, ஸமுத்ர முதலிய இடங்களில் ப்ரதிபலிக்கும் ஸூர்யோதயக்காட்சிப் பொலிவையும், இன்னும் இவை போன்ற இயற்கையற்புதங்களையும் கண்டு ஆநந்திப்பதைவிட மேலான இன்பம் ஏதேனும் உண்டோ?

முதன் முதலில் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திருப்பது மிகவும் கஷ்டமாகத்தானிருக்கும். ஆனால் அப்யாஸம் உண்டாய் விட்டால் பிறகு அது ஸுலபமாய் விடும். விடியற்காலையில் எழுந்திருப்பதற்கு ராத்ரியில் சீக்ரமாகப் படுத்துக் கொள்ளவேண்டும். "காலையில் ஐந்து மணிக்குமேல் தூங்குகின்றவனை நோயாளியென்றே அழைப்பேன் என்று வைத்ய சாஸ்த்ரியொருவர்எழுதுகின்றார்." "Early to bed and early to rise makes a man healthy, wealthy and wise"— என்ற ஓர் இங்கிலீஷ் பழமொழி இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து—வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை.

எம். எஸ். ஸ்ரீநிவாஸ சர்மா,
வேலூர்.

விதைப்பும் அறுப்பும்.

ஒரு வியவசாயி தனதுவயலில் நெல்விதைத்துக்கொண்டிருக்கும்பொழுது, மற்றொருவன் "இதனினின்றும் நீ எதை எதிர்பார்த்துக்கொண்டு விதைக்கின்றாய்?" என்றுகேட்பானாயின், அவ் வியவசாயி இவனை மிக அறிவீனனென்று மதித்தாலும் குற்றமாகாது; ஏனெனின், எதை விதைக்கின்றோமோ அதைத்தான் அறுப்போமென்பது ஒருதலையாதலின். ஞானியெனப் படுவோன் எச்சிறியகாரியத்தையும் அற்பமென அலக்ஷியஞ்செய்யாது, அதனினின்றும் ஒரு படிப்பினையைத் தெரிந்துகொள்வன். அங்ஙனம் அனைவரும் தெரிந்துகொள்வது விரும்பத்தக்கதே. அங்ஙனமே எப்பொழுதும் நம்மொவ்வொருவருடைய மனதிலும் 'விதைப்பும் அறுப்பும்' நடக்கின்றன வென்பதை எளிதிலுணரலாம். நமது மனத்திற்கு வித்துக்களாவன நம் எண்ணங்களும், வார்த்தைகளும் செய்கைகளுமாம். இவ்வித்துக்களும், ஏனையவித்துக்களைப்போலவே, தங்களினமாகிய-நல்லனவோ தீயனவோ-பலனை மாத்திரம் கொடுக்க வல்லமையுடையன.

பிறரை நேசிப்போன் பலராலும் நேசிக்கப்படுவதும், பிறரை வெறுப்போன் வெறுக்கப்படுவதும் சாதாரணமான தன்றோ? ஆயுள்முழுவதும் அக்கிரமத்தைச் செய்துவிட்டு, சாகுந்தருணத்துச் 'சங்கரா சங்கரா' வென்று சொல்பவன், வயலில் புல்லைவிதைத்துவிட்டு நெல்லை எதிர்பார்ப்பவனுக்குச் சமானமாகின்றான். ஆதலின், வேண்டியதெதுவோ, அதற்கேற்ற விதையை விதைப்பதே உத்தமமாம். ஆகவே, பிறருடைய ஆனந்தத்தைக் கருதுவதே, நாம் ஆனந்தமடைய ஒரு வழியாகும்.

மற்றொன்றும் நாம் கவனித்தற் குரியது. நற்பலனடைய விரும்பும் ஒருசமுசாரி தன் வித்துக்களைப் பருவமறிந்து வயலில விதைத்தால் மட்டும் புத்திசாலி யாவானே தவிர, பத்திரமாய்ப் பூட்டிவைத்திருப்பின், என்னபிரயோசனம்! இதுபற்றியே "To hoard is to lose; to exculsively retain is to be dispossessed" என்று ஜேம்ஸ் ஆலன் கூறியிருக்கின்றார். உதாரணமாக, திரவியமிகுதியும் தேடவிரும்புவோரும், தம்கையிலுள்ளபொருளை வியாபாரம்போன்ற நன் முயற்சிகளிற் போடுவதை அறியாதார் யாவர்? அங்ஙனம் பணத்தைப்போடாது, பூட்டியோ அல்லது புதைத்தோ வைத்திருப்பின், வரும்பயன் யாது?

நாம் பிறரிடத்து எங்ஙனம் நடக்கக் கடமைப்பட் டிருக்கின்றேமோ, அங்ஙனம் நடவாது, கடவுளிடத்துப் பலவற்றைப் பெற்றுக்கொள்ள நினைப்பது பேதைமையல்லவா? கலகத்தைப் பிறரிடம் பரப்பிக்கொண்டிருப்பவன், எங்ஙனம் சாந்தி சந்தோஷ முதலியவற்றைப் பெறுதல் இயலும்?

மனிதன் தன்னாலேயே ஆக்கவும் அழிக்கவும் படுகின்றான். ஆதலின், ஒருவன் துன்பத்துக்கும் துக்கத்துக்கும் மனக்கலக்கத்திற்கும் ஆளாயிருப்பின், அதற்குக்காரணம் அவனேயன்றிப் பிறிதல்ல; அவனவன் தன்தன்பாவ புண்ணியத்தின் பலனை அநுபவிக்கத்தானே ஜென்மம் எடுக்கின்றானென்று அறிகிறோம். "வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தால், தினைப்போ தளவுநில் லாதுகண்டாய்" என்று பட்டினத்தடிகளும் கூறியிருக் கின்றாரன்றோ?

சகோதரர்களே! 'துவரைபோட அவரைமுளைக்குமா?' தீமை விதைத்தால் தீமையும், நன்மைவிதைத்தால் நன்மையுந்தான் கிடைக்கும். ஆதலின், தீய எண்ணங்களைத் தவிர்த்து, நல்லெண்ணங்களையேநாட, நம் கருணைக்கடவுள் அருள்புரிவாராக!

நெல்லை-மாணிக்கவாசகன்.

பெண்கல்வி.

பெண்கள்படிப்பது பூர்வீக சம்பிரதாயமல்ல வென்று சிலர் துர்வாதம் செய்கிறார்கள். பாட்டனும் தகப்பனும் படியாத மூடர்களாயிருந்தால், பிள்ளையும் மூடனாக இருக்கவேண்டுமா? தகப்பன் உத்தியோகம் செய்யாமலிருந்தால் பிள்ளையும் உத்தியோகம் செய்யக்கூடாதா? பிராமணர்கள் வேதம் ஓதுதலை யன்றி மற்றொருதொழிலையும் செய்யக்கூடாதென்றும், அப்படியே மற்ற வர்ணத்தார்களும் தங்கள் தங்களுக்குரிய தொழில்களைச் செய்ய வேண்டுமென்றும் மனுநீதியிற் சொல்லப்பட்டிருக்க, இப்பொழுது பிராமணர்கள்வேதத்தை உபேக்ஷயாக விட்டுவிட்டு மற்ற வர்ணத்தார்களுடைய தொழில்களைச் செய்யவில்லையா? வேத பாராயணத்துக்குப் பிரதியாகச் சட்டப்பாராயணமும், வைதிக ஜீவனத்துக்குப்பதிலாக லௌகிக ஜீவனங்களும் செய்கின்றார்கள்.

கலப்பை ஆயுதத்தைக்கொண்டு பூமியையுழுது கிருஷித்தொழில் செய்யவேண்டியவர்கள் இறகு என்னும் ஆயுதத்தைக்கொண்டு கடிதமாகிய பூமியைஉழுது ஜீவனம் செய்யவில்லையா? இங்கிலீஷ் காரருடைய ராஜரீகத்தில் நாள்தோறும் சீர்திருத்தத்தையும், நாகரிகத்தையும் அடைந்துவருகிற நாம் ஸ்திரீகளுடைய பாவத்தைக்கட்டிக் கொள்வதற்காக மட்டும் அவர்கள் விஷயத்தில் பூர்வீக வழக்கத்தை அனுசரித்து அவர்களை அஞ்ஞானக்கடலில் அமிழ்த்துவது நீதியா? பெண்கள்படிப்பது புராதனவழக்கமல்லவென்று சொல்வது சுத்தப்பிசகு. திருவள்ளுவருடைய சகோதரிகளாகிய ஔவை, உப்பை, உருவை, வள்ளியம்மை முதலானவர்கள் கல்வி கற்று அநேகப்பிரபந்தங்களைச் செய்யவில்லையா? சைவர்களுடைய பெரியபுராணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட நாயன்மார்களில் ஒருவராகிய காரைக்காலம்மையும், வைஷ்ணவர்களுடைய குருபரம்பரைப் பிரபாவத்திற் கூறப்பட்ட ஆழ்வார்களில் ஒருவராகிய ஆண்டாள்என்னும் சூடிக்கொடுத்த நாச்சியாரும் பெண்களாயிருந்துங் கல்விகற்று அநேகம் ஸ்தோத்திரப் பாடல்களைச் செய்யவில்லையா? அன்றியும் சீதை, திரௌபதி, சந்திரமதி, தமயந்தி, சகுந்தலை முதலானவர்களும் மற்றும் சில ரிஷிபத்னிகளும், பாண்டியன் மனைவியும், கம்பர்வீட்டு வெள்ளாட்டியும் படித்தவர்களென்பது விசிதமாகத் தோன்றுகிறதே. இக்காலத்திலும் சில நகரங்களிலுள்ள ஸ்திரீகளும் படித்தவர்களென்பது ஜகத் பிரசித்தமாயிருக்கின்றது. நாலடியார், காரிகை முதலியநூல்கள் யார் முன்னிலையாகச் செய்யப்பட்டிருக்கின்றன? இன்னும் திருக்குறள், நாலடியார், காசிகாண்டம் முதலியநூல்களில் பெண்களுக்கிருக்க வேண்டிய கற்பு லட்சணம் முதலிய குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் புருஷர்களைப்போலவே, பெண்களும் படிப்பதற்காகவே இந்நூல்கள் செய்யப்பட்டனவென்பது காதலாமலகமாகவிருக்கின்றது. பெண்கள் படிக்கக்கூடாதென்பது மேற்படி கிரந்த கர்த்தர்களுடைய சித்தாந்தமாயிருந்தால் அவர்கள் மகடூஉ முன்னிலையாகப் பாடவும் கற்பு லட்சணங்களைப் பேசவும் நிமித்தமில்லை.

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல-நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு"

என்று சொல்லியிருப்பதால் மயிரழகும், மஞ்சளழகும், அழகல்ல, கல்வியழகே அழகு என்பது தெளிவாய்த் தோன்றுகின்றது.

குஞ்சி என்பது ஆண்மயிராதலால் மயிரழகை வேண்டுமானல் புருஷர்கள் எடுத்துக்கொள்ளட்டும். சேலைகட்டுவதும், மஞ்சள்பூசுவதும் பெண்களுக்குரிய அழகாதலால் அந்த அழகு தங்களுக்குரியதென்று புருஷர்கள் சொல்லத்துணியார்களென்று நம்புகிறோம். ஆகையால், பெண்கள் படிக்கவேண்டுமென்பது மேற்படி நூலாசிரியருடையகருத்தென்று பட்டப்பகல்போலவெட்டவெளிச்சமாயிருக்கிறது. பெண்களுக்குக் கல்விகூடாதென்று ஒருநூலிலும்காணப்படவில்லை. கணக்கும் எழுத்தும் கண்களுக்குச் சமானமென்று பலமேதாவிகள் கூறியிருக்கின்றார்கள்.

"எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்"

என்று ஔவையும்,

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்று திருவள்ளுவநாயனுரும் கூறியிருக்கின்றார்கள்.

கல்விப் பிரியன்.

பூங்காவனம்.

ஒன்பதாம் அதிகாரம்.

(முன்தொடர்ச்சி.)

சகோதரனை விட்டுப்பிரிந்த சிசுபாலன் வீடுவந்து சேர்ந்து அங்கே வேலைக்காரனின் முகத்தோற்றத்திற் காணப்பட்ட ஆச்சரியத்தையும் தத்தளிப்பையும் கவனித்தான். மங்களத்தின் வண்டி இந்தநிமிஷமே ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று ஜமீன்தார் சொல்லிக்கொண்டு கீழ் மாளிகைக்கு வந்து ஓடிப்போய், ஒரு நிமிஷமும் அநாவசியமாய்த் தாமதியாமல் என கட்டளைக் கமையுமபடி சொல்லென்றார். உடனே இரண்டு மூன்று பணியாளர் தங்கள் எஜமானின் கட்டளையை அறிவிக்கும்படி அசுவசாலைக்கு ஓடினர். அப்பொழுது ஜமீன்தார் சிசுபாலனைப் பார்த்து

எதிர்சென்று தொனி குன்றிய சத்தத்துடன் சிசுபாலனே! உன் கெடுதியான ஆலோசனையைக் கேட்டு எனது சந்தோஷத்தை இழந்தேனே யென்றார். அவன் நடுநடுங்கிப் பெரிய தந்தையே! தாங்கள் கடவுளுக்காக என்னை நிந்திக்க வேண்டாம்; எப்பொழுதும் இருந்தமாதிரி நீதியும் தயாளமுமாய் இருத்தல் வேண்டுமென்று கைகூப்பிக் கூறினான். அவர், மைந்தனே! நான் அரைப் பைத்தியக்காரனாய் விட்டேன்; அதனால் உன்னைக் குற்றஞ் சொல்லிப்போட்டேன்; என்னுடன் வாவென்று அழைத்துக்கொண்டு எதிரிலிருந்த அறைக்குட் பிரவேசித்தனர். அங்கே இவர்கள் தனிமையில் நிற்கும் பொழுது ஜமீன்தார் நடுக்கோபத்துடன் அங்குமிங்கும் உலாவினர்.

அப்பொழுது சிசுபாலன் இரக்கங்கொண்ட மனத்துடன் ஜமீன்தாரைக்கிட்டி என் அரியபெரிய தந்தையே! தங்களை இப்படிக் காண்கின்றது எனது உயிர் போவதுபோ லிருக்கின்றது. அதற்கு நான் என்ன செய்யவேண்டுமென்று கூறியருளுங்கள் என்றான். அவர் ஒன்றுமில்லை; என்றென்றைக்கும் எனது சந்தோஷம் போய்விட்டதே! ஆயினும், ஒரு கெட்ட பெண்ணுக்கும், கீர்த்தியற்ற ஒருவாலிபனுக்குமாக இவ்விதமாய் நான் வருந்துவது கூடாது. முன் என்மனைவியென்று சொல்லி அதன் படி நான் அவ்வளவாய் நேசித்த அவளே அந்தப்பெயருக்கும் அவ்வித நேசத்திற்கும் தகுதியற்றவளாய் வந்துவிட்டாளென்றதை அறிந்துகொள் என்றார். அப்பொழுது சிசுபாலன் எங்குலத்தலைவரே! நான் வரும்பொழுது அதிர்ஷ்டமில்லாத எனது சகோதரனைக் கண்டேன்; அவன் "—எனவும், ஜமீன்தார் தடுத்துச் சிசுபாலனே அவனைப்பற்றிய ஒரு சொல்லும் வேண்டாம், நீ அவன்மீது எவ்வளவு பட்சமாயிருக்கின்றாயென்றும் உன்னுடைய இருதயம் எவ்வளவு இரக்கமுடையதென்றும் நான் அறிவேன். நீ அவனுக்காகப் பரிந்து பேசத்துணிவாயானால் இந்த நிமிஷமே இவ்வறையைவிட்டு நான் புறப்பட்டுவிடுவேன், அல்லது நீ ஒருபோதும் திரும்பாமல் இவ்வீட்டை விட்டுவிட வேண்டியதாய்வரும்; அவர்கள் குற்றமற்றவர்கள் என்று சொல்லுவார்களென்பது எனக்குத் தெரியும்; குற்றமுள்ளவர்கள் தாங்கள் குற்றவாளிகளல்லவென்று சொல்வது வழக்கம்; அப்படித் தைரியமாகச் சொல்லுகின்றவர்கள் எவ்வளவு கீழான நரகம் அடைவார்கள். நீ வேறொன்றும்

சொல்ல வேண்டாமென்று அவ்வறையை விட்டுப் புறப்பட்டார். சிசுபாலன் அவர் புறப்பட்டதன் பின் இரண்டுமூன்று நிமிஷம் அங்கே தங்கிப்பின்பு வேகமாய்ச் சபாமண்டபம் வரும்பொழுது தன் அறையினின்றும் நீங்கிப்புறப்பட்ட மங்களத்தைச் சந்தித்தான். அப்பொழுது அவள் ஓ! என் அரிய பௌத்திரனே! என்ன பயங்கரமான சம்பவம்! என்னுடைய வண்டி ஆயத்தமானவுடன் பூங்காவனத்தையுங் கூட்டிக்கொண்டு புறப்பட்டு விடும்படி ஜமீன்தார் கட்டளை பண்ணிப் போட்டாரென்று பரபரப்புடன் மொழிந்தாள். சிசுபாலன் அம்மா! அவர் வேறென்ன சொன்னார் என்று ஆவலுடன் கேட்டான். ஒன்றுஞ்சொல்லவில்லை; என்னை வாய்திறக்கவும் விடவில்லை தம்பி! நான் உனக்கு அன்றுசொன்னவைகளுளொன்றையும் நீ ஜமீன்தாருக்கு அறிவிக்கவில்லையோவென்று கேட்டாள். அம்மா! நான் ஒருபோதும் சொல்லவில்லையென்றும், ஜமீன்தார் உன்னை என்னமாதிரி அல்லது எவ்விதமாய்க்கேட்டாலும் நான் உனக்குச்சொன்ன சம்பவங்களில் யாதாவதொன்றையும் கூறாதபடி கவனமாயிரு என்று வற்புறுத்திச் சொன்னான். நான் ஒன்றையும் சொல்லாதபடி கவனமாயிருப்பேன். ஓ! எவ்வளவு பயங்கரமான சம்பவமாயிருக்கின்றது! நான் அவர் சொன்னதைக் கேட்கும்பொழுது மயக்கம் தீர்க்கும் அவிழ்தச்சீசாவையாவது வைத்திருக்கவில்லை என்று பலங்குறைந்த நடுக்கத்துடன் மங்களம் கூறினாள். அவன் அம்மா! பொறும் யாரோ வருகின்ற அடிச்சத்தங் கேட்கின்றதென்று சொன்னான். சிறிதுநேரத்தில் அங்கு ஜமீன்தார் வெளிப்பட்டார். (அவரின் தோற்றம் கடினத்துடனும், இறுமாப்புடனும், அடக்க முடியாததாயும் முகம் வெளிறினதாயுமிருந்தது). அவர் விரைவாக மங்களத்தைக்கிட்டி அவளது கையைப்பிடித்து என் மனைவியின் உயிருடனிருக்கின்ற ஒரே உரித்தாளியாய் நீர் இருப்பதால் இனிமேல் அவளுடையதல்லாதிருக்கும் வீட்டிலிருந்தும் அவளை அழைத்துக் கொண்டுபோகக் கடமைப்பட்டவராய்இருக்கின்றீரென்றும் சொல்ல எனக்குத் துக்கமாயிருக்கின்றது. நீர் என்கட்டளைக்கமைந்து ஆயத்தமாய் விட்டதற்காக உமக்கு ஸ்துதி செலுத்துகின்றேன். ஆனால் என்னுடைய எண்ணத்தை இன்னும் சில தினங்களில் எனது வக்கீல்கள் அறிவிப்பார்கள், அம்மா! வந்தனம். என்று சொல்லினார். சிசுபாலனே! உன்சிறிய தாயார் வண்டியி

லேறி மங்களத்துடன் போகின்றாளோ பார் என்று மொழிந்த திரும்பியவர் மீண்டும்வந்து மைந்தனை அவள்கும்பிட்டுத்தன்னைச் சமாதானப்படுத்தும்படி மன்றாடுவாள்; நீ அதற்கு உடன்படுவாயானால் உன்னிடம் நான் தீராக்கோபம் பாராட்டுவேனென்று கூறிவிட்டுப் பக்கத்தேயுள்ள ஒரு அறையுட்புகுந்து கதவைப் பூட்டினார். அப்போது அங்கு நின்ற மங்களத்துக்கும் சிசுபாலனுக்கும் கதவு பூட்டின சத்தங்கேட்டது. சற்றுப்பொறுத்துப் பூங்காவனத்தின் தாதிகள் இறங்கிவந்து எஜமானி இதை எஜமானரிடம் கொடுக்கும்படி மன்றாடுகின்றாளென்று சொல்லி மங்களத்திடம் ஒரு காகிதத்தை நீட்டினார்கள். மங்களம் மெய்பாய் அவள் ஒரு ஏழை நான் அப்படிப்பட்ட செய்கைகள் ஒன்றுஞ் செய்யமாட்டேன்; எஜமாட்டிக்காகப் போகும் யாதாமொருவரையும் காணவுமாட்டார் பேசவுமாட்டார் என்றுமங்களம் சொல்லிச் சிசுபாலனைப்பார்த்து, தம்பி! நீயாவது கடைசியான பிரயத்தனம் செய்யென்றாள். அவன் ஆம் ஆம், நான் செய்வேன்; அது ஒரு பரிசுத்தமான கடமையாயிருக்கின்றது. நான் பெரிய தந்தையாரின் சந்தோஷத்தை இழந்தாலும் அதைச்செய்து முடிக்கின்றேன் என்று கூறி அக்கடிதத்தை எடுத்துக்கொண்டு ஜமீன்தார் பூட்டிக்கொண்டிருக்கும் அறையின் கதவைத்தட்டினான். உள்ளேயிருந்த அவர் யார் கதவைத்தட்டுகிற தென்றார்; சிசுபாலன் நான்தான் என்று உத்தரங் கூறியவுடன் கதவுதிறக்கப்பட்டது. தகப்பனும் மகனும் பத்துநிமிஷம் வரை பூட்டப்பட்ட குறித்த அறையிலிருந்தார்கள். அப்போது மங்களமும் தாதிகளும் கதவண்டை நின்றார்கள். பூங்காவனத்துக்கு இப்போது எப்படி இருக்கின்றது? கொஞ்சநேரத்துக்குமுன் என்னைத் தன்னுடைய அறைக்குள் வரவேண்டாமென்று ஏன்சொன்னாரென்று மங்களம் கேட்கப் பணியாளிகள் அம்மா! எஜமானி ஒருமணித்தியாலத்துக்கு முன் இருந்ததிலும் பார்க்க இப்போது பத்துவயது கூடியவளாகத் தோற்றுகின்றாள். இப்போது சின்ன எஜமான் பெரிய எஜமானிடம் கொண்டுபோன கடிதத்தை எழுதும்படி மேசையில் அமைதியாய் இருந்துவிட்டாள். அந்தக் கடிதத்தின் உள்வாசகம் எஜமானை இரக்கப்பண்ணும்படி கடவுள் கிருபை செய்வாராகவென்றும் எங்களின் எளிய எஜமாட்டி இக்கடிதம்எழுதுவதிற் கவனமாயிருந்தபடியால் உம்மைக்காண முடியாதென்றுசொன்னா

ளென்றும் கூறி, எஜமானி குற்றவாளி யென்றெண்ணக்கூடிய சம்பவம் ஒன்றும் இல்லையென்றும் அவர்கள் முறையிட்டனர்.

அத்தை மங்களமோ வென்றால் பூங்காவனத்தின் முற் காரியங்களை அறிந்திருந்தபடியாலும், அவள் அருட்பிரகாசத்தை எவ்வளவு நேசித்தாளென்று அறிந்திருந்தபடியாலும், அல்லாமலும் லௌகீக ஆடம்பரத்தில் ஆசைகொண்டு மனுஷத்தன்மையை ஒரு பக்கமே கட்டி வைத்திருந்தவளானபடியாலும், மெய்யாகவே பூங்காவனம் முழுக் குற்றவாளியா யிருக்கவேண்டுமென்று நம்பிப் பணியாளிகள் கூறிய கதாவிஷயத்தின் அம்சத்துக்குப் பதிலுத்தரமாய் அமங்களமான தலையசைப்பு அசைத்தாள். இதைக்கண்ட பணியாளிகளின் முகங்களும் மாறி முன் தத்தளித்துக் கொண்டு நின்ற எண்ணங்கள் அதிர்ஷ்டமற்ற பூங்காவனத்துக்கு விரோதமாய் மாறிவிட்டன.

இந்தச் சமயத்தில், சிசுபாலன் தனது பெரிய தகப்பனுடன் பேசிக்கொண்டிருந்த அறையைவிட்டு வெளியே வந்தான். அவனுடைய பார்வை சென்ற கருமம் ஜயமற்றதாய் விட்டதைக்காட்டிற்று. சிசுபாலன் ஜமீன்தார் கடிதத்தை வாசித்துப்பார்த்தார்; அப்பொழுது அவருடைய பத்தினியாருக்குச் செய்யவேண்டிய நீதி இதுவாயிருக்குமென்று என்னுற்கூடிய அளவு மன்றாடியும் பயனற்றதாயும் அவருடைய எண்ணத்தை மாற்றவும் அவர் தீர்மானத்தை அசைக்கவும் இயலாமற் போயிற்று. எஜமானி யாதொரு தடையுமின்றிப் புறப்பட்டுவிடவேண்டியதுதான் அவர் கட்டளை என்று மொழிந்தான். பணியாளிகள் துக்கமுகத்துடன் செல்ல மங்களமும் பின்சென்றாள். அவர்கள் எஜமானியின் அறையைச் சேர்ந்தனர். எண்ணக்கூடிய விதமாய் அல்லாமல் எழுதக்கூடாத துக்கத்துடன் பூங்காவனம் நின்றாள். அங்கேயே வேறொரு தாதி கூடவே நின்றாள். அவளின் எஜமாட்டியின் உருவம் அவ்விதமாய் உலாவிக்கொண்டு நிற்பதைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டு சிறிதுதூரத்தில் நின்றாள். பூங்காவனம் அதிக பயங்கரமான அதிர்ச்சியை உண்மையாய்ப் பெற்றுக்கொண்டதாய்த் தோற்றினாள். அவளின் முகத்தோற்றம் பிரேதத்தைப்போல வெளிறி யிருந்தது. கண்கள் தாழ்ந்திருந்தன; பார்வை பன்னிரண்டு வருஷகாலமாய் ஓயாத் துக்கத்தில் அமிழ்ந்தியதுபோன்று தோற்றப்பட்டது. கதவு திறக்கப்பட்டவுடன், அவள் வந்தவர்

களைப்பார்த்த பார்வை வருத்தமுடையதா யிருந்தது. அப்பொழுது மங்களம் எதிரிற்போய், பூங்காவனமே! உன்னால் எப்படிக்கூடும் என்றவுடன் "—அவள் மறுத்து அத்தை! என்னைக் குற்றவாளியாய் எண்ணிக்கொண்டீர்கள் போலும்; ஆனால் நான் குற்றவாளியல்ல வென்றாள். மங்களம் உன்னை அப்படியாய்த்தான் நான் நிச்சயமாய் நம்புகின்றேன்; இருந்தாலும், உனக்கு அது தெரியும்"—என்று சொல்லப், பூங்காவனம் மாமியார் மீது, வெறுப்பாகத் திரும்பி அவளுக்குப் பின்வந்த பணியாளியை நோக்கி வள்ளியம்மை என்னுடைய கடிதத்தின் முடிபென்ன அது பிரபுவிடத்தில் அனுப்பப்பட்டதா? என்று கேட்டவுடன், அவள் மறுமொழிகூற வருத்தமுள்ளவளா யிருந்ததைக் கவனித்தவுடன் ஜமீன்தார் யாவரேனும் காயிதமாவது தூதாவது தன்னிடத்தில் கொண்டு வரப்படாதென்று கட்டளைசெய்து ஓர் அறையிற் பூட்டிக்கொண்டிருக்கின்றார் என்று மங்களம் சொன்னாள். அதற்குப் பூங்காவனம், தான் குற்றவாளியென்று மங்களம் எண்ணிக்கொண்டாளென்றறிந்து அவளின் சொல்லை அலட்சியம் பண்ணினவளாய்த் தாதியைப் பார்த்து உதாரமாய் வள்ளியம்மையே! கடிதம் என்னவாயிற்றென்று கேட்க, அவள் எஜமாட்டியே! தயவுசெய்து சின்னஎஜமான் அதிகதுக்கத்தோடு பிரியமாய் அக்கடிதத்தைக் கொண்டுபோய் எஜமானிடம் கால்மணி நேரம் வரை தங்கியிருந்தார்; ஆனால் "—அம்மா! எனவும், தடுத்துப் போதும் என்று சொல்லும்பொழுது அவளின் முகம் சடுதியாய் வெளிறி நீ சொல்லுகிறது விளங்கவருகின்றது; பிரபு என்னை நம்பவில்லைபோலும்! ஆனபடியால் உடனே இந்த வீட்டைவிட்டு வெளிப்பட்டு விடுகின்றேன். (வரும்).

சிவராமலிங்கம் பிள்ளை,
யாழ்ப்பாணம்.

யுத்தம்.

சென்ற ஆறுமாத காலமாகநடந்து வரும் ஐரோப்பா யுத்தம் இன்னும் முடிவு பெறாது நீடித்துக்கொண்டிருப்பது உலக க்ஷேமத்தில் கருத்துடையார் யாவருக்கும் கவலையை யுண்டு பண்ணுவதாம். ஆயினும், இகலோக மேன்மை யொன்றையே கருதி உல

கத்தை ஸ்தூல சக்தியால் அடக்கியாள விரும்பும் அனைத் க்ஷத்ரியர்களின் நாசத்திற்காக இந்த யுத்தம் தெய்வ சங்கற்பத்தால் ஏற்பட்டதென்று தோன்றுவதால் இந்த யுத்தம் முடிந்த பின் உலகத்தின் எதிர்காலம் மிகுந்த மாட்சியுடன் சிறந்தோங்கு மென்பதில் ஐயமில்லை.

பிரான்சில் ஜெர்மனியருக்கும் பிரிட்டிஷ் பிரெஞ்சு நேசப் படைகளுக்கும் நடக்கும் யுத்தம் உக்ரமாகவே நடந்து வருகின்றது. பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக் காரரும் மிகுந்த தேசாபிமானத்துடனும் ராஜ விஸ்வாஸத்துடன் சண்டை செய்து வருகின்றனர். அவ்வாறிருந்தும் ஜெர்மனியர் பிரான்ஸை விட்டும் பெல்ஜியத்தை விட்டும் நீங்கவில்லை. இதற்குக் காரணம் என்ன வென்று பலர் கருதுதல்கூடும். பிரான்ஸில் பனி மிகுதியாயிருப்பதால் எக்கட்சியாரும் தீவிரமாக முன்னேக்க மார்க்கமில்லை.

ருஷிய ஜெர்மன் சண்டையும், ருஷிய ஆஸ்ட்ரியச் சண்டையும், ருஷியத் துருக்கிச் சண்டையும், மேற்கண்ட காரணத்தாலேயே நிதானமாக நடந்து வருகின்றது.

ரொமேனியா யுத்தத்தில் சேர்வதற்காகச் சித்தமாய்க்கொண்டு வருகின்றது. ஆனல் அது எந்தக்கட்சியில் சேருமென்பது தெரியவில்லை.

இத்தலியில் ஆங்கொனு என்னும் பட்டணத்திலிருந்து நேப்பிள்ஸ் பட்டணம் வரை சில தினங்களுக்கு முன் ஒரு பிரமாண்டமான பூகம்பம் நேர்ந்தது. அதனுல் சகல வளங்களும் சிறந்து விளங்கிய சுமார் 200-மைல் பிரதேசம் பாழாய்விட்டது. அவ்வெஸ்ஸானோ என்னும் பட்டணம் முழுமையும அழிந்து போய் விட்டது. 8000 ஜனங்களிருந்த அவ்வூரில் சுமார் 800 பேர்தான் உயிர் தப்பினர்கள். பூகம்பம் நேர்ந்த விடங்களிலெல்லாம் மொத்தமாகச் சுமார் 12000 பேர் இறந்தனர்; 20000 பேருக்கு மேலாகக் காயமடைந்தனர். ரோம் நகரத்திலுள்ள தேவாலயத்தில் கிறிஸ்தவ மதாசாரியர்களில் சிறந்தவரான பால் ஞானியாரின் 25 அடி உயரமுள்ள அழகிய விக்ரகமொன்று வைக்கப்பட்டிருந்தது. அது கீழே விழுந்து நொறுங்கிப்போய் விட்டது. அங்கு உள்ள ஸெயிண்ட் பீட்டர்என்னும்அழகிய பழமையானகோயிலின் ஜன்னல்கள் உடைந்து போயின. இந்தப் பூகம்பத்தால் இத்தலி நாட்டுக்குப் பெருத்த கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்பட்டு விட்டன. ஆனுலும் இத்தலி இந்த யுத்தத்தில் சமயம் நேரும் போது சேர்வதற்காகச் சித்தமாய்க் கொண்டிருக்கின்றது.